# அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் A+ (CGPA : 3.64) தகுதி பெற்றது)

நாள் : 31.7.2017

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களில் ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் பத்து மாணவர்கள் என்ற எண்ணிக்கையில் தேர்வு செய்து 'மாணவர் திறமை வங்கி' (STUDENT TALENT BANK) அழகப்பா பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் அழகப்பா பல்கலைக்கழகத் தன்னார்வ பயிலும் வட்டத்தின் ஒருங்கிணைப்பில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் ஒரு ஒருங்கிணைப்பாளர் தேர்வு செய்யப்பட்டு 28.07.2017 அன்று பல்கலைக்கழக வளாக மைய நூலக கருத்தரங்க கூடத்தில் அவர்களுக்கு ஒரு நாள் பயிற்சி வழங்கப்பட்டது.

அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ.) முனைவர் வி. பாலச்சந்திரன், தமது தொடக்க உரையில், திறமை (Talent), திறன் (Skill), ஆற்றல் (Competency) ஆகியவற்றை விளக்கி, வேலை உலகத்திற்கும், தொழில் முனைவோர் ஆவதற்கும், சமூகத்தில் திறம்பட செயல்படுவதற்குமான வகையில் கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவ, மாணவியருக்கு பயிற்சி அளிப்பதே திறமை வங்கியின் நோக்கம் என்று கூறினார்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி மற்றும் நபார்டு வங்கியின் ஒருங்கிணைப்பில் காரைக்குடியில் கிராமிய பயிற்சி மையம் தொடங்கப்பட்டுள்ளது. தொழில் முனைவோரை ஊக்குவிக்கவும், சுயத்தொழில் தொடங்க பயிற்சி அளிக்கவும் இம்மையம் செயலாற்றி வருகின்றது. அதன் இயக்குனர் திருமதி. G. அலமேலு அவர்கள், பல்கலைக்கழகத்துடன் இணைந்து அனைத்து கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு ஒருநாள் பயிற்சி அளிக்க இருப்பதாகக் கூறினார்.

திரு.M. சுப்பிரமணியன், வேலை வாய்ப்பு ஆலோசகர், வேலை உலகத்தின் சவால்கள், வாய்ப்புகள் குறித்து விளக்கம் அளித்தார். ஓய்வு பெற்ற இணைப் பேராசிரியர் எஸ். விஸ்வநாதன் மற்றும் புதுக்கோட்டை தன்னார்வ பயிலும் வட்ட உறுப்பினர்கள் இளைஞர்களின் மேம்பாடு குறித்து தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.



இதன் நிறைவு விழாவில், அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா சொ. சுப்பையா அவர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில், நகர்ப்புற மாணவர்களுக்கு இணையாக கிராமப்புற மாணவர்களுக்கும் விழிப்புணர்வு வழங்கி அவர்களது திறமையை வெளிப்படுத்தும் வகையில் பயிற்சி அளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் என்று கூறினார். இத்திட்டம் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். ஒவ்வொரு கல்லூரிக்கும் நேரடியாகச் சென்று இறுதி ஆண்டு பயிலும் மாணவ, மாணவியருக்கு ஒருநாள் வேலை வாய்ப்பு, சுயதொழில் குறித்து விழிப்புணர்வு அளிக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், மேலும் ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் பத்து பல்வேறு திறமைகளை உள்ளடக்கிய இளைஞர்களை இனங்கண்டு திறமை வங்கியை உருவாக்கி ஆண்டு முழுவதும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு, சுயதொழில் பயிற்சி, உயர்கல்வி / ஆராய்ச்சிக்கான ஆலோசனை, வெற்றியாளர்களுடன் சந்திப்பு என்ற வகையில் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். இத்திட்டத்திற்கு தமிழக அரசு ஒப்புதல் வழங்கியதையும் குறிப்பிட்டார். இதில் ஒருங்கிணைப்பாளர்கள் / பேராசிரியர்கள் கல்லூரி முதல்வர்கள் ஆகியோரின் ஆலோசனையின் படி சிறந்த மாணவ, மாணவியரை தெரிவு செய்வதால் மட்டுமே, இத்திட்டத்தை திறம்பட நடைமுறைப்படுத்த முடியும் என்று குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளைச் சார்ந்த பேராசிரியர்கள் கலந்து கொண்டார்கள். பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பேரா. K.குருநாதன் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி வளர்ச்சிக் குழும இயக்குநர் பேரா. S. ராஜமோகன் நன்றி கூறினார்.

பதிவாளர் (பொ.)

பேரா. வி. பாலச்சந்திரன்